
تاميلي

# நன்மையின் வாசல்கள்



# أبواب الأجور

سلطانة
Sultanah

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بسلطانة
تحت إشراف وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد

# أبواب الأجور

أعده وترجمه إلـــى اللغة التاميلية:

## شعبة توعية الجاليات في الزلفي

الطبعة الأولى: ٦/١٤٢٦ هـ.


ح شعبة توعية الجاليات بالزلفي، ١٤٢٦هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

شعبة توعية الجاليات بالزلفي
أبواب الأجور – الزلفي ، ١٤٢٦ هـ
٣٦ ص؛ ١٢ × ١٧ سم
ردمك : ٦-٧٦- ٨٦٤-٩٩٦٠
(النص باللغة التاميلية )
١-الوعظ والارشاد ٢- فضائل القرآن أ. العنوان
ديوي ٢١٣ ١٤٢٦/١٤٨٤

رقم الإيداع : ١٤٢٦/١٤٨٤

ردمك : ٦-٧٦ – ٨٦٤–٩٩٦٠


الصف والإخراج: **شعبة توعية الجاليات في الزلفي**

# ابواب الأجور

# நன்மையின் வாசல்கள்

## திருக்குர்ஆனின் சிறப்புகள்

**1. குர்ஆனை மனனம் செய்தல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "குர்ஆனை மனனம் செய்து ஓதுகிறவர் கண்ணியத்திற்குரிய, நல்லவர்களான வானவர்களுடன் இருப்பார். குர்ஆனைத் திக்கித் திக்கி, சிரமம்பட்டு ஓதுபவருக்கு இரண்டு கூலிகள் உள்ளன." அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), நூல்: புகாரி-4937, முஸ்லிம்-798

**2. குர்ஆனை ஓதுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "குர்ஆனை ஓதுங்கள். ஏனெனில் மறுமையில் அது அதனை ஓதியவருக்கு பரிந்துரை செய்யக்கூடியதாக வரும்." அறிவிப்பவர்: அபு உமாமா (ரலி), நூல்: முஸ்லிம்-804

**3. குர்ஆனைக் கற்றலும் கற்பித்தலும்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "குர்ஆனைக் கற்று பிறருக்குக் கற்றுக் கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்."

அறிவிப்பவர்: உஸ்மான் (ரலி), நூல்: புகாரி-5027

**4. ஸூரதுல் இக்லாஸ்:** "ஒரு இரவில் குர்ஆனில் மூன்றில் ஒரு பகுதியை உங்களில் யாரேனும் ஓத முடியாமல் போகுமா?" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியபோது, 'குர்ஆனில் மூன்றில் ஒரு பகுதியை

எப்படி ஓத முடியும்?’ எனத் தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி(ஸல்)அவர்கள், “குல்ஹுவல்லாஹு அஹத் குர்ஆனில் மூன்றில் ஒரு பகுதிக்கு நிகரானதாகும்” எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: அபுத்தர்தா(ரலி), நூல்: முஸ்லிம்-811

**5. குல்ஹுவல்லாஹு அஹத், குல்அவூது பிரப்பில் ஃபலக்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “இன்று இரவு இறங்கிய வசனங்களை நீர் பார்க்கவில்லையா? அவை போன்று எதுவும் காணப்படவில்லை. அவை, குல் அவூது பிரப்பில் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ் ஆகியவை யாகும். அறிவிப்பவர்: உக்பா பின் ஆமிர் (ரலி), நூல்: முஸ்லிம்-814

**6. ஸூரதுல் பகரா:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: “உங்கள் வீடுகளை அடக்கஸ்தலமாக ஆக்கிவிடா தீர்கள். எந்த வீட்டில் ஸூரதுல் பகரா ஓதப்படுகிறதோ அந்த வீட்டிலிருந்து ஷைத்தான் விரண்டோடுகிறான்.” அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-780

**7. அல்பகரா, ஆலு இம்ரான்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “குர்ஆனை ஓதுங்கள். ஏனெனில் மறுமையில் அது அதனை ஓதியவருக்கு பரிந்துரை செய்யக்கூடியதாக வரும். அல்பகரா, ஆலு இம்ரான் ஆகிய ஒளிமயமான இரண்டு ஸூராக்களை ஓதுங்கள்.

அவ்விரண்டும் மறுமையில் இரு மேகங்களைப் போல் அல்லது இறக்கை விரித்துப் பறக்கும் இரண்டு பறவைக் கூட்டங்களைப்போல் வந்து அவற்றை ஓதியவர் களுக்காக வாதாடும். ஸூரதுல் பகராவை ஓதுங்கள். ஏனெனில் அதைப் பற்றிப் பிடிப்பது பரகத் ஆகும். அதை விட்டுவதோ நஷ்டமாகும். அசத்தியவாதிகள் (அல்லது சூனியக்காரர்கள்) அதன் சிறப்பை அடைய முடியாது. அறிவிப்பவர்: அபு உமாமா (ரலி), நூல்: முஸ்லிம்-804

**8. ஆயதுல் குர்ஸி:** "அபூ முன்திரே! உன்னிடமுள்ள அல்லாஹ்வின் வேதத்தில் மகத்தான வசனம் எது?" என்று நபி (ஸல்) அவர்கள் (என்னிடம்) கேட்டார்கள். நான், "அல்லாஹு லாயிலாஹ இல்லாஹுவல் ஹய்யுல் கய்யூம்" (ஆயத்துல் குர்ஸி) என்றேன். நபி(ஸல்) அவர்கள் என் நெஞ்சில் தட்டி, "அபூ முன்திரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! கல்வி உனக்கு எளிதாக வரும்" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: உபை இப்னு கஅப் (ரலி), நூல்: முஸ்லிம்-810

**9. ஸூரதுல் பகராவின் கடைசி வசனங்கள்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு இரவில் பகரா அத்தியாயத்தின் கடைசி இரண்டு வசனங்களை யார் ஓதினாரோ அவை அவருக்குப் போதுமானதாகும்." அறிவிப்பவர்: அபூமஸ்வூத் (ரலி), நூல்: புகாரி-5010

குறிப்பு: இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது: “போதுமானதாகும்” என்றால் இரவில் எழுந்து தொழுவதற்கும் ஷைத்தானை விட்டும் துன்பங்களை விட்டும் பாதுகாப்பு பெறுவதற்கும் போதுமானதாகும். மேலும் எல்லாவற்றுக்கும் போதுமானதாகும் என்ற கருத்தும் கொள்ளலாம்.

**10. ஸூரதுல் கஹ்பின் ஆரம்ப வசனங்களை மனனம் செய்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஸூரத்துல் கஹ்பின் ஆரம்ப பத்து வசனங்களை யார் மனனம் செய்தாரோ அவர் தஜ்ஜாலை விட்டும் பாதுகாப்பு பெறுவார்.” மற்றொரு அறிவிப்பில் ஸூரத்துல் கஹ்பின் கடைசி பத்து வசனங்களை யார் மனனம் செய்தாரோ...என்று உள்ளது. அறிவிப்பவர்: அபுத்தர்தா (ரலி), நூல்: முஸ்லிம்-809

## திக்ரின் சிறப்புகள்

**11. அல்லாஹ்வை அதிகம் நினைவுகூரல்:** “மு.ஃ.பர்ரிதூன்கள் முந்திவிட்டனர்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். “மு.ஃ.பர்ரிதூன்கள் யார்?” எனத் தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் “அல்லாஹ்வை அதிகம் நினைவுகூரும் ஆண்களும் பெண்களும்” என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்-2676

**12.** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ்வை நினைவு கூருபவருக்கும் அல்லாஹ்வை நினைவுகூராத வருக்கும் உதாரணம் உயிருள்ள மனிதரையும் உயிரற்ற மனிதரையும் போன்றதாகும். அறிவிப்பவர்: நூல்: புகாரி-6407, முஸ்லிம் -779

ஆனால் முஸ்லிமில் உள்ள வாசகம் இவ்வாறாகும்: அல்லாஹ் நினைவுகூரப்படக்கூடிய வீட்டிற்கும் அல்லாஹ் நினைவுகூரப்படாத வீட்டிற்கும் உதாரணம் உயிருள்ள மனிதரையும் உயிரற்ற மனிதரையும் போன்றதாகும்.

**13. தஸ்பீஹ் செய்தல்:** "உங்களில் யாருக்கேனும் தினமும் ஆயிரம் நன்மைகளைச் சம்பாதிக்க முடியாமல் போகுமா?" என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அப்போது அங்கிருந்தோரில் ஒருவர், 'எங்களில் ஒருவர் தினமும் ஆயிரம் நன்மைகளை எப்படி சம்பாதிக்க முடியும்?' என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "நூறு தடவை தஸ்பீஹ் செய்தால் நூறு நன்மைகள் எழுதப்பட்டு நூறு பாவங்கள் அழிக்கப்படும்" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: ஸஅத் (ரலி), ((முஸ்லிம்-2698)

(சுப்ஹானல்லாஹ் என்று கூறுவது தஸ்பீஹ் ஆகும்.)

14. "சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்று ஒரு நாளைக்கு 100 தடவை யார் கூறினாரோ அவருக்காக அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அவை

கடல் நுரை அளவுக்கு இருந்தாலும் சரியே!" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-6405, முஸ்லிம்-2691

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ (பொருள்: அல்லாஹ்வைப் புகழ்ந்து துதிக்கிறேன்.)

15. நபி(ஸல்)அவர்கள் கூறினார்களஃ: "காலையிலும் மாலையிலும் '**சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி**' என்று நூறு தடவை கூறுகிறாரோ மறுமையில் அவருக்குக் கிடைக்கும் நன்மையை விடச் சிறந்தது யாருக்கும் கிடைக்காது. ஆயினும் ஒருவர் அவர் கூறியதைப் போன்றோ அல்லது அதை விட அதிகமாகவோ கூறினாலே தவிர. அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-2692

16. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நாவுக்கு எளிதான தராசுக்கு கனமான ரஹ்மானுக்கு விருப்பமான இரண்டு வார்த்தைகள் '**சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அழீம்**' ஆகியவையாகும். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-6406, முஸ்லிம்-2694

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ ، سُبْحَانَ اللهِ الْعَظِيمِ

(பொருள்: அல்லாஹ்வைப் புகழ்ந்து துதிக்ககிறேன். மகத்துவமிக்க அல்லாஹ்வைத் துதிக்கிறேன்.)

17. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **“சுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலா யிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்”** என்று நான் கூறுவது சூரியன் உதயமாகும் பொருட்களை விடவும் எனக்கு மிக விருப்பமானதாகும். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-2695

سُبْحَانَ اللهِ ، وَالْحَمْدُ لِلّهِ ، وَلاَ إِلَهَ إِلاَّ اللهُ ، وَاللهُ أَكْبَرُ

**(பொருள்:** அல்லாஹ் தூய்மையானவன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அல்லாஹ் மிகப் பெரியவன்.)

18. நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: “(கடமையான) ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் ‘**சுப்ஹானல்லாஹ்**’ 33 தடவையும், ‘**அல்ஹம்து லில்லாஹ்**’ 33 தடவையும், ‘**அல்லாஹு அக்பர்**’ 33 தடவையும் இவை 99 தடவை யாகும். நூறை நிறைவு செய்வதற்காக ‘**லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்**’ என்றும் யார் கூறுகிறாரோ அவருடைய பாவங்கள் கடல் நுரையளவு இருந்தாலும் மன்னிக்கப்படும். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்-597

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

**(பொருள்:** வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன்.அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சியதிகாரம் அவனுக்கே. புகழ் அனைத்தும் அவனுக்குரியதே. அவன் அனைத்தின் மீதும் ஆற்றலுடையவன்.)

**19. லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்:** "சொர்க்கத்து பொக்கிஷங்களில் ஒரு வார்த்தையை உனக்கு அறிவித்துத் தரட்டுமா?" என்று நபி(ஸல்) அவர்கள் என்னிடம் கேட்டார்கள். நான் 'ஆம்' என்றேன். அதற்கவர்கள், "லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அபூமூஸா (ரலி), நூல்: புகாரி-6409, முஸ்லிம்-2704

**(பொருள்:** நன்மை செய்வதும் தீமையிலிருந்து விலகு வதும் அல்லாஹ்வைக் கொண்டே தவிர வேறில்லை.)

**20. பாவமன்னிப்புத் தேடுவதில் தலையாயது:** நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்: "பாவமன்னிப்புத் தேடுவதில் தலையாயது, '**அல்லாஹும்ம அன்த ரப்பீ லாயிலாஹ இல்லா அன்த, கலக்தனீ வஅன அப்துக, வஅன அலா அஹ்திக வவ.்.திக மஸ்தத.்.து, அஊதுபிக மின்ஷர்ரி மா ஸன.்.து, அபூஉ லக பிநி.்.மதிக்க அலய்ய, வஅபூ பிதன்பீ .்.பக் .்.பிர்லீ இன்னஹு**

லாயக்.ஃ.பிருத்துனூப இல்லா அன்த' என்று கூறுவது ஆகும். யார் இதனை உறுதியான நம்பிக்கையுடன் காலையில் கூறிவிட்டு மாலை வருவதற்கு முன் மரணித்துவிடுகிறாரோ அவர் சொர்க்கவாசியாவார். யார் இதனை உறுதியான நம்பிக்கையுடன் இரவில் கூறி விட்டு காலை வருவதற்கு முன் மரணித்துவிடுகிறாரோ அவரும் சொர்க்கவாசியாவார். அறிவிப்பவர்: ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி); நூல்: புகாரி-6306

اَللّهُمَّ أَنْتَ رَبِّي لا إِلهَ إِلاَّ أَنْتَ خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ وَأَنَا عَلى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ وَأَبُوءُ بِذَنْبِي فَاغْفِرْ لِيْ إِنَّهُ لا يَغْفِرُ الذُّنُوبَ إِلا أَنْتَ

(பொருள்: இறைவா! நீயே என்னுடைய இறைவன். உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உனது அடிமை. நான் என்னால் முடிந்த வரை உனது வாக்குறுதியின் மீதும் உனது உடன்படிக்கையின் மீதும் நிலைத்திருக்கிறேன். நான் செய்த செயல்களின் தீமையை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். நீ எனக்கு அளித்த அருட்கொடைகளை எல்லாம் ஒப்புக் கொள்கிறேன். நான் செய்த பாவங்களையும் ஏற்றுக் கொள்கிறேன். எனவே எனது குற்றங்களை மன்னித்து

அருள்புரிவாயாக! பாவங்களை மன்னிப்பவன் உன்னை தவிர வேறு யாருமில்லை.)

**21. தூக்கத்தின் இடையில் விழித்து விட்டால் துஆ செய்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் இரவில் விழித்து **'லாயிலாக இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். அல்ஹம்து லில்லாஹி வசுப்ஹானல்லாஹி வல்லாஹு அக்பர் வலா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்'** என்று கூறி **'இறைவா என்னை மன்னித்து விடு'** என்றோ அல்லது வேறு பிரார்த்தனைகளையோ செய்தால் அவை அங்கீகரிக்கப்படும். உளுச் செய்து தொழுதால் அத்தொழுகை ஒப்புக்கொள்ளப்படும். அறிவிப்பவர்: உப்பாதா பின் ஸாமித் (ரலி), நூல்: புகாரி-1154

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ
اَلْحَمْدُ للهِ وَسُبْحَانَ اللهِ وَاللهُ أَكْبَرُ وَلاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللهِ

(**பொருள்:** வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சியும், புகழும் அவனுக்குரியன. அவன் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அல்லாஹ் தூயவன்! அல்லாஹ் மிகப் பெரியவன்!

நாம் நன்மை செய்வதும் தீமையிலிருந்து விடுபடுவதும் அவனைக் கொண்டே.)

**22. லாயிலாஹ இல்லல்லாஹ் கூறுதல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: **“லாயிலாக இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்** என்று ஒரு நாளைக்கு நூறு தடவை யார் கூறுகிறாரோ அவருக்கு பத்து அடிமைகளை விடுதலை செய்ததற்கு நிகரான கூலி கிடைக்கும். மேலும் அவருக்கு நூறு நன்மைகள் எழுதப்பட்டு 100 பாவங்கள் மன்னிக்கப்படும். மாலை வரை அது அவருக்கு ஷைத்தானை விட்டும் பாதுகாப்பாக அமையும். (மறுமையில்) அவருக்குக் கிடைக்கும் நன்மையை விடச் சிறந்தது யாருக்கும் கிடைக்காது. ஆயினும் ஒருவர் அவர் செய்ததை விடக் கூடுதலாகச் செய்தாலே தவிர.” அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-6403, முஸ்லிம்-2691

23. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “**லாயிலாக இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்** என்று 10 தடவை கூறியவர் இஸ்மாயில் (அலை) அவர்களின் வழித்தோன்றல்களில் பத்து அடிமைகளை விடுதலை செய்தவரைப் போலாவார்.” அறிவிப்பவர்: அபூஅய்யூப் (ரலி), நூல்: முஸ்லிம்-2693

**24. அல்லாஹ் . நினைவுகூரப்படுகின்ற சபையின் சிறப்பு:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "எந்த மக்கள் அல்லாஹ்வை நினைவுகூரிக்கொண்டு அமர்ந்திருக்கின் றார்களோ அவர்களை வானவர்கள் வளைத்துக் கொள்கிறார்கள். இறையருள் அவர்களைச் சூழ்ந்து கொள்கிறது. அவர்கள் மீது அமைதி இறங்குகிறது. தன்னிடமுள்ள(வான)வர்களிடம் அல்லாஹ் அவர்களைப் பற்றி எடுத்துரைக்கிறான்." அறிவிப்பவர்: அபூஹுரைரா, அபூஸயீத் (ரலி), நூல்: முஸ்லிம்-2700

**25. நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் என் மீது ஒரு முறை ஸலாவாத்துச் சொன்னால் அல்லாஹ் அவருக்கு பத்து முறை அருள் புரிகிறான். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்-408

**26. உண்ட பின், குடித்த பின் அல்லாஹ்வைப் புகழ்தல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: எதையேனும் சாப்பிட்டு விட்டு அல்லது குடித்து விட்டு அதற்காக அல்லாஹ்வைப் புகழ்கின்ற அடியானை அல்லாஹ் திருப்தியுறுகிறான். அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: முஸ்லிம்-2734

## உளூ மற்றும் தொழுகையின் சிறப்புகள்

**27. உளூவை அழகாகச் செய்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் உளூச் செய்கிறாரோ அதையும் அழகாகச் செய்கிறாரோ அவரது பாவங்கள் அவரது உடம்பிலிருந்து ஏன் அவருடைய நகக்கண்கள் வழியாகக்கூட வெளியேறிவிடுகின்றன." அறிவிப்பவர்: உஸ்மான் (ரலி), நூல்: முஸ்லிம்-245

28. நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் ஏவியபடி முழுமையாக உளூச் செய்து கடமையான தொழுகைகளை யார் நிறைவேற்றுகிறாரோ அவற்றுக்கு இடையேயுள்ள பாவங்களுக்கு அவை பரிகாரமாக அமைகின்றன." அறிவிப்பவர்: உஸ்மான் (ரலி), நூல்: முஸ்லிம்-231

**29. உளூவுக்குப் பின் திக்ரு சொல்லல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் ஒருவர் உளூச் செய்து விட்டு அதையும் பூரணமாகச் செய்து விட்டு பிறகு '**அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு**' என்று கூறினால் அவருக்காக சொர்க்கத்தின் எட்டு வாசல்கள் திறக்கப்படுகின்றன. அவற்றில் அவர் விரும்பிய எந்த வாசல் வழியாகவும் அவர் அதில் நுழையலாம். அறிவிப்பவர்: உமர் (ரலி), நூல்: முஸ்லிம்-234

أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

(**பொருள்:** வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்.)

**30. பாங்கு சொல்லும்போது செய்ய வேண்டியது:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் பாங்கு சொல்வதைக் கேட்டால் பாங்கு சொல்பவரைப் போல திருப்பிச் சொல்லுங்கள். பிறகு என் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள். என் மீது ஒரு முறை ஸலவாத்து சொல் பவருக்கு அல்லாஹ் பத்து முறை அருள் புரிவான். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி), நூல்: முஸ்லிம்-384

**('ஹய்ய அலஸ் ஸலா, ஹய்ய அலல் ∴பலா' என்று சொல்லும் நாம் 'லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்' என்று சொல்ல வேண்டும். இதற்கு ஆதாரம் உள்ளது.)**

**<u>ஸலவாத்து:</u> அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம் இன்ன ஹமீதும் மஜீத் அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின்**

**கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம் இன்ன ஹமீதும் மஜீத்.**

**اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى إِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى إِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ**

(**பொருள்:** இறைவா! முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் நீ அருள் புரிவாயாக. இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தினர் மீதும் நீ அருள் புரிந்தது போன்று. நீ புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன். இறைவா! முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தினர் மீதும் நீ பரகத் செய்வாயாக. இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் நீ பரகத் செய்தது போன்று. நீ புகழுக்கும் மாட்சிமைக்கும் உரியவன்.)

**31. பாங்கு சொல்வதைக் கேட்கும்போது ஓதும் துஆ:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: “பாங்கு சொல்வதைக் கேட்கும் போது, **‘அல்லாஹும்ம ரப்ப ஹாதிஹித் த∴வதித் தாம்மதி வஸ்ஸலாத்தில் காயிமதி ஆத்தி முஹம்மதனில் வஸீலத வல்∴பழீலத வப்அஸ்ஹு மகாமம் மஹ்மூதனில்லதீ வஅத்தஹு’** என்று யார் கூறுகிறாரோ மறுமையில் அவருக்கு எனது பரிந்துரை

அவசியம் கிடைக்கும். அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: புகாரி-614

اَللّٰهُمَّ رَبَّ هَذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ وَالصَّلَاةِ الْقَائِمَةِ آتِ مُحَمَّدَ ۨالْوَسِيْلَةَ وَالْفَضِيْلَةَ وَابْعَثْهُ مَقَامًا مَحْمُوْدَ ۨالَّذِيْ وَعَدْتَّهُ

(பொருள்: இறைவா! இந்த முழுமையான அழைப்பு மற்றும் நிலையான தொழுகையின் இரட்சகனே! முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பிரத்தியேக நெருக்கத்தையும் சிறப்பையும் வழங்குவாயாக. மேலும் 'மகாம் மஹ்மூத்' எனும் புகழுக்குரியதோர் இடத்தில் அவர்களை எழுப்புவாயாக. அவ்வாறே நீ வாக்குறுதி அளித்துள்ளாய்.)

**32. பாங்கு சொல்வதன் சிறப்பு:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "பாங்கு சொல்பவரின் பாங்கு சப்தத்தைக் கேட்கின்ற ஜின், மனிதன் வேறு எதுவாக இருந்தாலும் மறுமையில் அவருக்காக சாட்சி சொல்லும்.

அறிவிப்பவர்: அபூஸயீத் (ரலி), நூல்: புகாரி-609

**33. பள்ளிவாசல் கட்டுதல்:** உஸ்மான்(ரலி)அவர்கள் நபி(ஸல்)அவர்களின் பள்ளியை விரிவுபடுத்தியபோது 'நீங்கள் மிகவும் விரிவுபடுத்திவிட்டீர்கள்' என்று மக்கள் அவர்களிடம் ஆட்சேபணை செய்தார்கள். அதற்கு "அல்லாஹ்வின் திருமுகத்தை நாடி யார் பள்ளிவாசல் ஒன்றைக் கட்டுகிறாரோ அது போன்ற ஒன்றைச்

சொர்க்கத்தில் அவருக்காக அல்லாஹ் கட்டுகிறான்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறக் கேட்டுள்ளேன் என உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: உஸ்மான் (ரலி), நூல்: புகாரி-450, முஸ்லிம்-533

**34. இமாமுடன் ஆமீன் சொல்லுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "இமாம் ஆமீன் கூறும்போது நீங்களும் ஆமீன் கூறுங்கள். ஏனெனில் எவருடைய ஆமீன் மலக்குகள் கூறும் ஆமீனுடன் இணைந்து விடுகின்றதோ அவரது முன்பாவங்கள் மன்னிக்கப் படுகின்றன." அறிவிப்பவர்: ஆபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-780, முஸ்லிம்-410

**35. தொழுகைக்காக விரைந்து செல்லுதல்:** நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்: "...தொழுகையை ஆரம்ப நேரத்தில் நிறைவேற்றுவதில் உள்ள நன்மையை அறிவார்களானால் அதற்காக விரைந்து செல்வார்கள்." அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), புகாரி-615, முஸ்லிம்-437

**36. வீட்டில் உளுச் செய்து வீட்டு நடந்து பள்ளிக்குச் செல்லல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "யார் தமது வீட்டில் உளுச் செய்துவிட்டு அல்லாஹ்வின் கடமைகளில் (ஐவேளை தொழுகைகளில்) ஒன்றை நிறைவேற்றுவதற்காக இறையில்லங்களில் ஒன்றுக்கு நடந்து செல்கிறாரோ அவர் எடுத்து வைக்கின்ற

எட்டுக்களில் ஒன்று ஒரு பாவத்தை அழிக்கிறது. மற்றொன்று ஒரு அந்தஸ்தை உயர்த்துகிறது.”

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்-666

**37. பள்ளிவாசலுக்கு அதிக தூரம் நடந்து செல்லுதல்:** “எதன் மூலம் அல்லாஹ் பாவங்களை அழித்து பதவிகளை உயர்த்துவானோ அக்காரியங்களை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?” என நபி(ஸல்) கேட்டார்கள். அதற்குத் தோழர்கள் ‘அல்லாஹ்வின் தூதரே! அறிவியுங்கள்’ என்றனர். உடனே நபி(ஸல்) அவர்கள், “சிரமமான நேரங்களிலும் உளுவைப் பூரணமாகச் செய்வது, பள்ளிவாசல்களுக்கு அதிக தூரம் நடந்து செல்வது, ஒரு தொழுகையைத் தொழுது விட்டு மறுதொழுகையை எதிர்பார்ப்பது. இது தான் எல்லையைப் பாதுகாப்பது, இது தான் எல்லையைப் பாதுகாப்பது” என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-251

38. நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: “ஒருவர் காலையிலோ மாலையிலோ பள்ளிவாசலுக்குச் சென்றால், அல்லாஹ் அவருக்காக அவர் காலையிலும் மாலையிலும் செல்லும்போதெல்லாம் சொர்க்கத்தில் ஒரு உபசரிப்பை தயார் செய்கிறான். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-662, முஸ்லிம்-669

**39. வழமையான சுன்னத்துகளைப் பேணல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஒரு முஸ்லிமான அடியான் ஒரு நாளைக்கு உபரியாக பன்னிரண்டு ரக்அத்துகள் அல்லாஹ்வுக்காகத் தொழுதால் அல்லாஹ் அவனுக்காக சொர்க்கத்தில் ஒரு வீட்டைக் கட்டுவான்.

அறிவிப்பவர்: உம்மு ஹபீபா(ரலி), நூல்: முஸ்லிம்-728

**40. இரவுத் தொழுகை:** ‘கடமையான தொழுகைக்குப் பிறகு சிறந்த தொழுகை எது?’ என்று நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டபோது, “கடமையான தொழுகைக்குப் பிறகு சிறந்த தொழுகை நடு இரவில் தொழுவதாகும்” என பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்-1163

41. **இஷா மற்றும் சுப்ஹுத் தொழுகைகளை ஜமாஅத்துடன் நிறைவேற்றுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “இஷாவை ஜமாஅத்துடன் தொழுதவர் பாதி இரவு வரை நின்று வணங்கியவர் போலாவார். சுப்ஹை ஜமாஅத்துடன் தொழுதவர் இரவு முழுவதும் நின்று வணங்கியவர் போலாவார்.”

அறிவிப்பவர்: உஸமான் (ரலி), நூல்: முஸ்லிம்-656

**42. அழகிய முறையில் உளூச் செய்து விட்டு ஜும்ஆவுக்கு வருதல், உரையை அமைதியாக செவி தாழ்த்திக் கேட்டல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: “யார் உளூச் செய்து அதையும் அழகிய முறையில்

செய்து பிறகு ஜும்ஆவுக்கு வந்து, உரையை அமைதியாக செவி தாழ்த்திக் கேட்கிறாரோ அவருக்காக அந்த ஜும்ஆவுக்கும் அடுத்த ஜும்ஆவுக்கும் கூடுதலாக இன்னும் மூன்று நாட்களுக்கும் இடைப்பட்ட பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.” அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-857

**43. ஜும்ஆவுக்கு முன்னேரத்தில் வருதல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஜும்ஆ நாள் வந்து விட்டால் வானவர்கள் பள்ளியின் நுழைவாயிலில் நின்று கொண்டு முதலில் வருபவரையும் அதைத் தொடர்ந்து வருபவர்களையும் வரிசைப்படி பதிவு செய்கிறார்கள். முதலில் வருபவர் ஒட்டகத்தைக் குர்பானி கொடுத்தவர் போலவும் அதற்கடுத்து வருபவர் மாட்டைக் குர்பானி கொடுத்தவரைப் போலவும் அதன் பிறகு வருபவர் ஆட்டையும் அதன் பிறகு வருபவர் கோழியையும் அதன் பிறகு வருபவர் முட்டையையும் குர்பானி கொடுத்தவர் போலவுமாவார். இமாம் வந்து விட்டால் வானவர்கள் தங்கள் ஏடுகளைச் சுருட்டிவிட்டு சொற்பொழிவுகளைக் கேட்க ஆரம்பித்துவிடுவார்கள். அறிவிப்பவர்:

அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-929, முஸ்லிம்-850

**44. ஜனாஸா தொழுகையும் அதன் நல்லடக்கத்தில் கலந்து கொள்தலும்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஜனாஸாவில் அதற்குத் தொழுகை நடத்தப்படும் வரை

யார் கலந்து கொள்கிறாரோ அவருக்கு ஒரு கீராத் அளவு நன்மை உண்டு. அதனை அடக்கம் செய்யப்படும் வரை யார் கலந்து கொள்கிறாரோ அவருக்கு இரண்டு கீராத் அளவு நன்மை உண்டு. 'இரண்டு கீராத் என்றால் என்ன?' என்று வினவப்பட்டது. அதற்கு நபி(ஸல்)அவர்கள் "இரண்டு மிகப் பெரிய மலைகள் போன்றாகும்" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-945

## நோன்பின் சிறப்புகள்

45. **நம்பிக்கையுடனும் நற்கூலி கிடைக்கும் என்ற எண்ணத்துடனும் ரமழானில் நோன்பு நோற்றல்:** நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்: "நம்பிக்கையுடனும் நற்கூலி கிடைக்கும் என்ற எண்ணத்துடனும் யார் ரமழானில் நோன்பு நோற்கிறாரோ அவருடைய முன்பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன." அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி-38, முஸ்லிம்-760

**46. நம்பிக்கையுடனும் நற்கூலி கிடைக்கும் என்ற எண்ணத்துடனும் ரமழானில் இரவு தொழுதல்:** நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்: "நம்பிக்கையுடனும் நற்கூலி கிடைக்கும் என்ற எண்ணத்துடனும் யார் ரமழான் இரவில் தொழுகிறாரோ அவரது முன்பாவங்கள் மன்னிக் கப்படுகின்றன.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-759, முஸ்லிம்-759

**47. ஷவ்வாலில் ஆறு நாட்கள் நோன்பு நோற்றல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "யார் ரமழானில் நோன்பு நோற்ற பின் அதைத் தொடர்ந்து ஷவ்வாலிலும் ஆறு நோன்புகள் நோற்றாரோ அவர் காலம் முழுவதும் நோன்பு நோற்றவராவார்."

அறிவிப்பவர்: அபூஅய்யூப்(ரலி), நூல்: முஸ்லிம்-1164

**48. ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்றல்:** அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: "என்னுடைய நண்பர் எனக்கு மூன்று விஷயங்களை அறிவுறுத்தினார். நான் மரணிக்கும் வரை அவற்றை விட்டுவிட மாட்டேன். அவை, ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பது, லுஹா தொழுவது, தூங்கும் முன் வித்ரைத் தொழுது விடுவது ஆகியவையாகும்." நூல்: புகாரி-1178, முஸ்லிம்-721

**49. அரபா நாளில் நோன்பு நோற்றல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அரபா நாளில் நோன்பு நோற்பதால் அதற்கு முந்தைய மற்றும் பிந்தைய வருடத்திற்குரிய பாவங்களை அல்லாஹ் மன்னிப்பான் என்று எதிர்பார்க்கிறேன்." அறிவிப்பவர்: அபூகதாதா(ரலி), நூல்: முஸ்லிம்-1162

**43. ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்றல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்பதால் அதற்கு முந்தைய வருடத்திற்குரிய பாவங்களை அல்லாஹ் மன்னித்தருள்வான் என்று எதிர்பார்க்கிறேன்."

அறிவிப்பவர்: அபூகதாதா(ரலி), நூல்: முஸ்லிம்-1162

## இன்னும் பல சிறப்புகள்

**51. பாவமன்னிப்புத் தேடுதல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "சூரியன் மேற்கிலிருந்து உதயமாகும் முன் யார் பாவமன்னிப்புத் தேடினாரோ அவரை அல்லாஹ் மன்னித்துவிடுகிறான்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-2703

**52. ஹஜ், உம்ராவின் சிறப்பு:** ஒரு உம்ரா செய்து விட்டு இன்னொரு உம்ரா செய்வது அவற்றுக்கிடையில் உள்ள பாவங்களுக்குப் பரிகாரமாக அமையும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு சொர்க்கத்தைத் தவிர வேறு கூலி கிடையாது. அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-1773, முஸ்லிம்-1349

**53. துல்ஹஜ் பத்து நாட்களில் நற்செயல்கள் அதிகம் செய்தல்:** "ஏனைய நாட்களில் செய்கின்ற எந்த நல்லறமும் இந்த (துல்ஹஜ்) பத்து நாட்களில செய்கின்ற நல்லறத்தை விடச் சிறந்ததல்ல" என்று

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். ‘ஜிஹாதை விடவுமா?’ என்று தோழர்கள் கேட்டனர். “ஜிஹாதை விடவும் தான். ஆயினும் தன் உயிரையும் பொருளையும் பணயம் வைத்துப் புறப்பட்டு (அவ்விரண்டில்)எதையும் திரும்பக் கொண்டு வராத போராளியைத் தவிர” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி), நூல்: புகாரி-969

**54. கல்வி கற்றல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “கல்வியைத் தேடும் பாதையில் செல்பவருக்கு அல்லாஹ் சொர்க்கத்துக்கு செல்லும் பாதையை எளிதாக்குகிறான்.” அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்-2699

**55. மார்க்கத்தில் விளக்கம் பெறுதல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “எவருக்கு அல்லாஹ் நன்மையை நாடுகின்றானோ அவரை மார்க்கத்தில் விளக்கம் பெற்றவராக ஆக்கிவிடுகின்றான்.”அறிவிப்பவர்: முஅவியா (ரலி), நூல்: புகாரி-71, முஸ்லிம்-1037

**56. அல்லாஹ்வின் பக்கம் அழைத்தல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “யார் நேர்வழியின் பக்கம் அழைக்கிறாரோ அதனைப் பின்பற்றியவர்களுக்குக் கிடைக்கும் கூலியைப் போன்று அவருக்கும் உண்டு. அது அவர்களின் கூலியில் எதையும் குறைத்து விடாது...” அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்-2674

**57. நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல்:** நபி(ஸல்) கூறினார்கள்: “உங்களில் யாரேனும் தீமையை கண்டால் அவர் தனது கையால் அதைத் தடுக்கட்டும். அதற்கு இயலவில்லையெனில் தனது நாவால் தடுக்கட்டும். அதற்கும் இயலவில்லையெனில் தன் மனதால் அதை வெறுக்கட்டும். இதுவே ஈமானில் மிகப் பலவீனமானது!”
அறிவிப்பவர்: அபூஸயீத் (ரலி), நூல்: முஸ்லிம்-49

**58. ஸலாமைப் பரவலாக்குதல்:** ‘இஸ்லாத்தில் சிறந்த செயல் எது?’ என்று ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டார். அதற்கவர்கள், “உணவளிப்பதும், அறிந்த வருக்கும் அறியாதவருக்கும் ஸலாம் சொல்வதுமாகும்” என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி), நூல்: புகாரி-12, முஸ்லிம்-39

**59. அல்லாஹ்வுக்காக நேசித்தல்:** நபி(ஸல்) கூறினார்கள்: “எனக்காக பரஸ்பரம் நேசித்தவர்கள் எங்கே? எனது நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத இன்றைய தினம் நான் அவர்களுக்கு எனது நிழலின் கீழ் நிழல் கொடுப்பேன்” என்று அல்லாஹ் மறுமையில் கூறுவான். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), முஸ்லிம்-2566

**60. உண்மை பேசுதல்:** நபி(ஸல்) கூறினார்கள்: “உண்மையைப் பற்றிப் பிடியுயுங்கள்.ஏனெனில் உண்மை நன்மையின் பால் வழிகாட்டும். நன்மை சுவர்க்கத்தின் பால் வழிகாட்டும். ஒருவர் உண்மை பேசுபவராகவும்

உண்மைக்காகவே உழைப்பவராகவும் இருந்தால் அல்லாஹ்விடம் உண்மையாளர் என எழுதப்படுவார்...” அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி), நூல்: புகாரி-6094, முஸ்லிம்-2607

**61. நற்குணம்:** நபி(ஸல்) கூறினார்கள்: “நற்குண முடையவரே உங்களில் சிறந்தவர்.” அறிவிப்பவர்: இப்னு அம்ர் (ரலி), நூல்: புகாரி-3559, முஸ்லிம்-2321

**62. மலர்ந்த முகம் காட்டுதல்:** நபி(ஸல்) கூறினார்கள்: “உனது சகோதரனை மலர்ந்த முகத்துடன் சந்திப்பது உட்பட எந்த நல்லறத்தையும் அர்ப்பமாக எண்ணி விடாதே!” அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர்(ரலி), நூல்: முஸ்லிம்-6690

**63. மென்மை:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “மென்மையை இழந்துவிடுபவர் நன்மையை இழந்து விடுவார்.” அறிவிப்பவர்: ஜரீர்(ரலி), நூல்: முஸ்லிம்-6598

**64. நோயாளியை நோய் விசாரித்தல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “நோயாளியை நோய் விசாரிப்பவர் சொர்க்கத்துக் கனிகளைப் பறித்துக் கொண்டே இருப்பார்.” அறிவிப்பவர்: ஸவ்பான்(ரலி), நூல்: முஸ்லிம்-2568

**65. பொறுமை:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஒரு முஸ்லிமுக்கு களைப்பு, நோய், துயரம், துன்பம்,

கவலை, முள் தைத்தல் உட்பட்ட எது ஏற்பட்டாலும் அதற்குப் பகரமாக அல்லாஹ் அவனது பாவங்களை மன்னித்து விடுகிறான். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-5642, முஸ்லிம்-2573

**66. நன்மை செய்தல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நற்செயல்கள் அனைத்தும் தர்மமாகும்." அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி), (புகாரி-6021, முஸ்லிம்-1005)

**67. சிரமங்களை நீக்குதல்:** நபி(ஸல்) கூறினார்கள்: "ஒரு முஃமினை விட்டும் இவ்வுலகின் சிரமங்களில் ஒன்றை ஒருவன் நீக்கினால் மறுமையின் சிரமங்களில் ஒன்றை அவனை விட்டும் அல்லாஹ் நீக்குவான். ஒரு கடனாளியிடம் ஒருவன் இலகுவாக நடந்து கொண்டால் இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் அவனிடம் இலகுவாக நடந்து கொள்வான்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்-2699

68. "மறுமையின் சிரமங்களை விட்டும் அல்லாஹ் தன்னைக் காக்க வேண்டும் என்று யார் விரும்புகிறாரோ அவர் கடனாளிக்கு அவகாசம் வழங்கட்டும் அல்லது கடனைத் தள்ளுபடி செய்யட்டும்.

அறிவிப்பவர்: அபூகதாதா (ரலி), நூல்: முஸ்லிம்-1563

**69. அநாதையைப் பராமரித்தல்:** நபி(ஸல்) அவர்கள் தமது ஆட்காட்டி விரல், நடுவிரல் ஆகிய இரண்டு

விரல்களால் சுட்டிக்காட்டி, “நானும் அநாதையைப் பராமரிப்பவரும் சொர்க்கத்தில் இவ்வாறு இருப்போம்” என்று கூறினார்கள். அறிவிப்பவர்: ஸஹ்ல் பின் ஸஅத் (ரலி), நூல்: புகாரி-6005

**70. ஏழை மற்றும் விதவைக்காகப் பாடுபடுதல்:** “ஏழைகள் மற்றும் விதவைகளுக்காகப் பாடுபடுபவர் அல்லாஹ்வின் பாதையில் போர் புரிபவரைப் போலாவார். அல்லது பகலெல்லாம் நோன்பு நோற்று இரவெல்லாம் நின்று வணங்கியவரைப் போலாவார். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-5353, முஸ்லிம்-2982

**71. முஸ்லிம்களுக்காக துஆச் செய்தல்:** நபி(ஸல்) கூறினார்கள்: “ஒரு முஸ்லிம் தன் சகோதரனுக்காக மறைவிலிருந்து துஆச் செய்வது ஏற்றுக் கொள்ளப்படும். அவருடைய தலையில் (அவருக்காகப்) பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட வானவர் ஒருவர் இருப்பார். அந்த முஸ்லிம் தன் சகோதரனுக்காக நலவை வேண்டிப் பிரார்த்திக்கும் போதெல்லாம் (அவருக்காகப்) பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட அந்த வானவர் ஆமீன் கூறிவிட்டு உனக்கும் அதுபோல் கிடைக்கட்டும் என்று கூறுவார். அறிவிப்பவர்: அபுத்தர்தா (ரலி), நூல்: முஸ்லிம்-2733

**72. உறவினரை அனுசரித்தல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: “தனக்கு வாழ்வாதாரம் தாராளமாக வழங்கப்பட வேண்டும் என்றோ அல்லது தனது வாழ்நாள்

அதிகரிக்கப்பட வேண்டுமென்றோ விரும்புபவர் தனது உறவினரை அனுசரித்து வாழட்டும். அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: புகாரி-2067, முஸ்லிம்-2557

**குறிப்பு:** 'யுன்ஸவு ஃபீ அஸரஹி' என்ற மூலச் சொல்லுக்கு 'தனது வாழ்நாள் அதிகரிக்கப்படுதல்' என்று பொருள் கொள்ளப்படுவது போல் 'மக்கள் மத்தியில் தனது புகழ் தன் மரணத்திற்குப் பிறகும் மங்காமல் இருத்தல்' என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.

**73. தர்மம் செய்தல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "தூய்மையான சம்பாத்தியத்திலிருந்து ஒரு பேரீத்தம்பழ அளவு யார் தர்மம் செய்கிறாரோ- தூய்மையானதைத் தவிர வேறு எதுவும் அல்லாஹ்வை நோக்கி மேலேறிச் செல்வதில்லை-அதனை அல்லாஹ் தன் வலக்கரத்தால் வாங்கிக் கொள்கிறான். பிறகு உங்களில் ஒருவர் தனது குதிரைக் குட்டியை வளர்ப்பது போல அதை அல்லாஹ் தர்மம் செய்தவருக்காக வளர்க்கிறான். மலையைப்போல அது பெரிதாகின்ற வரை. அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-7430, முஸ்லிம்-1014

**74. நற்கூலியை எதிர்பார்த்து குடும்பத்திற்கு செலவு செய்தல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "ஒரு முஸ்லிம் நற்கூலியை எதிர்பார்த்து தனது குடும்பத்திற்கு செலவு செய்தால் அது அவனுக்குத் தர்மமாக அமையும்."

அறிவிப்பவர்: அபூமஸ்வூத் (ரலி), நூல்: புகாரி-5351, முஸ்லிம்-1002

**75. பெண் குழந்தைகளைப் பராமரித்தல்:** "யார் இரண்டு பெண் குழந்தைகளை பருவமடையும் வரை பராமரித்து வந்தாரோ அவரும் நானும் மறுமையில் இவ்வாறு இருப்போம் என்று நபி(ஸல்) அவர்கள் தமது விரல்களை இணைத்துக் காட்டிக் குறிப்பிட்டார்கள். அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: முஸ்லிம்-2631

**76. நிலையான தர்மம்:** நபி(ஸல்) கூறினார்கள்: "நிலையான தர்மம், பயன் தரும் கல்வி, தனக்காப் பிரார்த்தனை செய்யும் நல்லொழுக்கமுள்ள பிள்ளை ஆகிய மூன்றையும் தவிர மற்ற செயல்பாடுகள் யாவும் மனிதன் மரணித்ததும் முடிவுக்கு வருகின்றன." அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-1631

**77. தொல்லை தரும் பொருளை பாதையிலிருந்து அகற்றுதல்:** நபி(ஸல்) கூறினார்கள்: "ஒரு மனிதர் பாதையில் நடந்துகொண்டிருக்கும்போது முட்கிளை ஒன்றைக் கண்டு அதனை அப்புறப்படுத்தினார். அவரது நன்றியுணர்வை அல்லாஹ் ஏற்று அவரை மன்னித்தான்." அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-2472, முஸ்லிம்-1914

**78. ஆரோக்கியமும் ஓய்வும்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "இரண்டு அருட்கொடைகள் விஷயத்தில்

பெரும்பாலான மக்கள் அலட்சியமாக இருக்கின்றனர். அவை ஆரோக்கியமும் ஓய்வும் ஆகும்." அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: புகாரி-6412

**79. பிள்ளை இறந்துவிட்டால் பொறுத்துக் கொள்ளுதல்:** "உலகிலுள்ளவர்களில் மு..மினான என் அடியானுக்குப் பிரியமான அவனது பிள்ளையை நான் கைப்பற்றும்போது (என்னிடம்) நற்கூலியை எதிர்பார்த்து அதனை அவன் பொறுத்துக் கொண்டால் அவனுக்காக என்னிடம் சொர்க்கத்தைத் தவிர வேறு கூலி கிடையாது." என்று அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி-6424

**80. அல்லாஹ் தன் நிழலின் கீழ் நிழல் கொடுக்கும் ஏழு பேர்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் வுடைய நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத நாளில் ஏழு பேருக்கு அல்லாஹ் தனது நிழலின் கீழ் நிழல் கொடுப்பான். அவர்கள், நீதிமிக்க ஆட்சித் தலைவன், இறைவழிபாட்டில் இளமையைக் கழித்த வாலிபர், தனது உள்ளம் பள்ளிவாசல்களோடு தொடர்பு கொண்ட ஒரு மனிதர்,அல்லாஹ்வுக்காக ஒருவரையொருவர் நேசிக்கக் கூடிய இரு மனிதர்கள். அவர்கள் அல்லாஹ்வுக்காகவே ஒன்று கூடுவார்கள், அல்லாஹ்வுக்காகவே பிரிந்து செல்வார்கள். அழகும் நல்ல குலமும் கொண்ட ஒரு பெண் தவறு செய்ய அழைத்தும் 'நான் அல்லாஹ்வை

அஞ்சுகிறேன்' என்று கூறிய மனிதன், வலது கையால் தர்மம் செய்வது இடது கைக்குத் தெரியாத அளவுக்கு இரகசியமாகத் தர்மம் செய்யும் மனிதர், தனிமையில் அல்லாஹ்வை நினைத்து கண்ணீர் சிந்தும் மனிதன் ஆகியோர். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-1423, முஸ்லிம்-1031

**81. அல்லாஹ்வுக்காக ஒருவரை சந்தித்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு மனிதர் வேறொரு ஊரில் உள்ள தனது சகோதரனை சந்திக்கச் சென்றார். வழியில் அவரை எதிர்பார்த்திருக்கும்படி ஒரு வானவரை அல்லாஹ் அனுப்பி வைத்தான். அந்த மனிதர் அந்த வானவரிடம் வந்தபோது "எங்கே செல்கிறாய்?" என்று அந்த வானவர் கேட்டார். அதற்கு அந்த மனிதர், 'இந்த ஊரில் எனது சகோதரன் இருக்கிறார். அவரைப் பார்க்கச் செல்கிறேன்' என்றார். "அவர் உனக்கு ஏதும் உபகாரம் செய்திருக்கிறாரா?" என்று வானவர் கேட்க, அந்த மனிதர், 'இல்லை! ஆனாலும் நான் அவரை அல்லாஹ்வுக்காக நேசிக்கிறேன்' என்றார். உடனே அந்த வானவர், "நான் அல்லாஹ்விடமிருந்து உன்னிடம் வந்த தூதராவேன். நீ அல்லாஹ்வுக்காக அவரை நேசித்தது போல் அல்லாஹ்வும் உன்னை நேசித்து விட்டான்" என்று கூறினார். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்-2567

**82. சிறிதளவு இணைவைத்தலை விட்டும் விலகி யிருத்தல்:** நபி(ஸல்) கூறினார்கள்: “அல்லாஹ்வுக்கு எதையும் இணை கற்பிக்காமல் அல்லாஹ்வை சந்திப்பவர் சொர்க்கம் செல்வார். அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைத்த நிலையில் அல்லாஹ்வை சந்திப்பவர் நரகம் செல்வார். அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: முஸ்லிம்-93

**83. பல்லியைக் கொல்லுதல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: “ ஒரே அடியில் பல்லியை கொன்றவருக்கு நூறு நன்மைகள் எழுதப்படும். இரண்டு அடிகளில் கொன்றால் நூறை விடக் குறைவாகவும் மூன்று அடிகளில் கொன்றால் அதைவிடக் குறைவாகவும் நன்மைகள் எழுதப்படும். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-2240

**84. நற்செயல் குறைவாக இருப்பினும் தொடர்ந்து செய்தல்:** ‘நற்செயல்களில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானது எது?’ என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள், “குறைவாக் இருப்பினும் தொடர்ந்து செய்வதே!” என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), (புகாரி-6465, முஸ்லிம்-783)

**85. நல்ல நடைமுறை:** நபி(ஸல்) கூறினார்கள்: “இஸ்லாத்தில் நல்லதொரு நடைமுறையை தோற்று விப்பவருக்கு அதற்கான கூலியும் அவருக்குப் பின் அந்த

நடைமுறையை யாரெல்லாம் பின்பற்றுகிறாரோ அவர் களின் கூலியும் உண்டு. அவர்களின் கூலியில் எதுவும் குறைந்துவிடாது. இஸ்லாத்தில் தீயதோர் நடைமுறையை தோற்றுவிப்பவருக்கு அதற்குரிய பாவமும் அவருக்குப் பின் அந்த நடைமுறையை யாரெல்லாம் பின்பற்று கிறாரோ அவர்களின் பாவமும் உண்டு. அவர்களின் பாவங்களில் எதுவும் குறைந்து விடாது." அறிவிப்பவர்: ஜரீர்(ரலி), நூல்: முஸ்லிம்-1017